ARCHUNA

சிறுவர்களுக்கான மாத இதழ்

# அர்ச்சுனா

ஞ்சி பெருவாழ்வு

டிசம்பர் 2011

50 ரூபா



நட்புடன் உதவுவோம்

தேவமைந்தன் பிறந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ARCHUNA



### அன்புக்குரிய எங்கள் செல்வங்களே!

# நல்ல நண்பர்களைத் தேடுவோம்..

"உன் நண்பனை எனக்கு காண்பியுங்கள் நான் உங்களைப் பற்றி சொல்லுகிறேன்" என்பார்கள். நாங்கள் சேர்த்துகொள்ளும் நண்பர்கள் அல்லது எங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளும் நண்பர்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் அமைவது அவசியமாகும். நல்லவர்களை நண்பர்களாகப் பெற நாம் முயற்சிப்பதே மேலானதாகும். எல்லா நிலைகளிலும் எம்முடன் சிறந்த நட்பு கொள்ளும் நண்பர்கள் புத்தகங்களே. நல்ல புத்தகங்களை எமது நண்பர்களாக ஏற்று வாசித்து செயற்பட்டால் நாம் நல்லவர்களாவோம். என்றுமே அழியாத வாழ்வும் வளமும் வழிகாட்டலும் புத்தகங்களை நேசிப்பதன் மூலமும் வாசிப்பதன் மூலமும் எமக்குக் கிடைக்கின்றன.

எனவே நல்ல நண்பர்கள் நல்ல புத்தகங்களே என உரத்துக் கூறுங்கள். புத்தகங்களை நண்பர்களாக ஏற்றுக் கொள்ளுங்கள். நல்ல புத்தகங்கள் நல்ல நண்பர்களே.

**ஆசிரியர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணில் ஒளிரு மொளி - மனு
வேந்தன் சிறுகுடில் தன்னில் மலர்ந்திட்ட
மண்ணில் உயர்ந்த தினம் - மாமரி
மைந்தன் உதித்த தினம்.

பூவிற் பிறந்த இறை - சுற்றிப்
போர்த்திய துன்ப இருட்கறை போக்கிடும்
பாவிகள் நேச மீட்பர் - சிறு
பாலகன் யேசு மேய்ப்பர்

தட்டுங்கள் தாழ் திறக்கும் - நாம்
தாங்கிச் சுமந்திடும் பாவச் சிலுவையை
தொட்டவர் தோள் சுமக்கும் - வாழ்விற்
தூய வழி பிறக்கும்.

கேளுங்கள் பெற்றுயர்வீர் - வெற்றிக்
கேடயம் நல்லிறை வேந்தனின் வார்த்தைகள்
சூழுங்கொல் அச்சம் வெல்வீர் - பாவச்
சுமையை இறக்கிச் செல்வீர்.

சத்தியம் ஜீவன் வழி - கொடும்
சாவினை வென்றநற் தேவ குமாரனெம்
நித்திய ஜீவ தண்ணீர் - இருள்
நீக்கிடும் ஞான ஒளி.

வாழ்த்தி வணங்கி நிற்போம் - தேவ
வார்த்தைகள் மாமிச மாகியே வந்தநாள்
ஆழ்த்தும் மகிழ்வில் அன்பில் - வழி
ஆக்கும் உயர்வில் என்போம்.

**செ.மகேந்திரன்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களும் வாய்ப்புகளும்

நெற்செய்கை, மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, என்பன இம்மாவட்டத்தின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாகும். தொழில் வாய்ப்புகள் பெரும்பாலும் பருவகாலத்தை அடிப்படையாகக் கொண்டவை. உயர் கல்விக்கான வாய்ப்புகள் இம் மாவட்டத்தில் மிகக்குறைவு. 20ஆண்டுகளுக்கு மேலாக நிலவும் யுத்தத்தினால் மன்னார் மாவட்டத்தில் அழிவுகளும் மனித இடப்பெயர்வுகளும் பெருமளவில் இடம் பெற்றன. முன்னர் மக்கள் வாழ்ந்த பல இடங்கள் உட்கட்டமைப்பு வசதிகளின் சீரழிவினாலும் பெருந்தொகையான மக்களின் இடப்பெயர்வுகளினாலும் இப்பொழுது காடுகளாகக் காட்சி தருகின்றன. மாவட்டத்தின் பொருளாதாரத்தில் மீன்பிடியே பிரதான பங்கு வகிக்கிறது. பெரும்பாலான மக்களின் ஜீவனோபாயமும் அதுவே, மன்னாரில் 50 சதவீதமான குடும்பங்களும், முசலியில் 40 சதவீதமான குடும்பங்களும் மீன்பிடியை நம்பியே வாழ்கின்றனர். குறிப்பாக மன்னாரில் 52 கிராமங்களில் 8700றகு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்கின்றன. உப்பளங்கள், அரிசி ஆலைகள் என்பவற்றையும் ஆங்காங்கே காணலாம். கருவாடு உற்பத்தி, சட்டி பானை வனைதல், தச்சுத் தொழில், கைப்பணிப் பொருள் உற்பத்தி, ஆபரணத் தொழில், கிடுகு வேய்தல் போன்றவை குடிசைக் கைத் தொழிலாக மேற்கொள்ளப்படுகின்றன.



மொத்தப் பரப்பு - *1996 சதுர கிலோ மீற்றர்*
நிலப்பரப்பு *1880 சதுர கிலோ மீற்றர்*
நீர் நிலைகள் *116 சதுர கிலோ மீற்றர்*
பிரதேச செயலாளர் பிரிவுகள் 5


1) மன்னார்
2) மடு
3) நானாட்டான்
4) மாந்தை மேற்கு
5) முசலி



சனத்தொகை - *99000*
ஆண்கள் - *52000*
பெண்கள் - *47000*
பத்து வயதிற்கு மேற்பட்டோர் - *74858 (2004ல் மதிப்பீட்டின்படி)*
தொழிலாளர் அணி - *29450 (29.3%)*
தொழிலாளர் அணி பங்கீடு விவசாயம் - *49.1%*
தொழிலாளர் அணி பங்கீடு கைத்தொழில் - *12.1%*
தொழிலாளர் அணி பங்கீடு சேவைகள் - *38.8%*



# மன்னார் மாவட்டம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலி யார்?




**ஒரு** கிராமத்தான் ஆடு வாங்க சந்தைக்குப் போனான். அதே கிர்ர்மத்தைச் சோர்ந்த இன்னொருவன் சந்தையிலிருந்து வந்து கொண்டிருந்தான். இருவரும் வழியிலிருந்த ஆற்றுப்பாலத்தில் சந்தித்தனர்

"இது எங்கள் மூதாதையர் கட்டிய பாலம். நீ எங்கள் விரோதி. நீ ஆடு வாங்கிக் கொண்டு இந்த வழியாகத் திரும்பி வந்தால் உதைப்பேன்."

"உதை பார்க்கலாம்!"
"இப்போது இல்லை நீ திரும்பி வரும்போது உதைப்பேன்!"

சண்டை முற்றும்போது, அதே கிராமத்தைச் சேர்ந்த இன்னொருவன் சந்தையிலிருந்து அரிசி வாங்கிக் கொண்டு பாலத்தின் வழியே வந்தான். அவன் இடையில் புகுந்து, "முட்டாள்களே! இல்லாத ஆடுகளுக்காக ஏன் சண்டை போடுகிறீர்கள்?" என்று கேட்டு, தன் தலையிலிருந்த மூடையை இறக்கி, அரிசியை முழுவதுமாக ஆற்றில் கொட்டினான்.



பிறகு வெறும் சாக்கை இருவருக்கும் காட்டி, "பைக்குள் இப்போது என்ன இருக்கிறது?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்றார்கள் இருவரும்

"இதுபோலத்தான் உங்கள் இருவர் தலையிலும் கொஞ்சமும் மூளை இல்லை!" என்றான் அவன்.

இந்த மூவரில் யார் புத்திசாலி?



யார் என்று
கண்டுபிடித்துவிட்டீர்களா..?
20ஆம் பக்கம்பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லப்பாம் டப்பாம் 07

## மாயமாய் மறைந்த வைர நெக்லஸ்

கல்யாண வீட்டிலிருந்து ஒலிபெருக்கி மூலம் காற்றில் மிதந்து வந்து 'மச்சானைப் பார்த்தீங்களா' என்ற சினிமாப் பாடலைக் கேட்ட லப்பாம் டப்பாம் இருவரும் தங் களை மறந்து ஆடினார்கள்.

பின்பு "அம்மோய் கல்யாண வீட்டை போறம்" என்று கத்தினார்கள் அதைக் கேட்ட தாய் "பெரிய இடத்துக் கல்யா ணம். போக வேணாம்" என்றாள்.

'அப்ப றோட்டிலை நின்று பாட்டுக் கேக்கி றம்' என்று சொல்லிவிட்டு றோட்டிற்குப் போனார்கள்.

அவர்கள் றோட்டில் நின்று பாட் டைக் கேட்கும் பொழுது பெண் வீட்டிலிருந்து சோடனைக்கார் மணப்பெண்ணுட ன் கோவிலை நோக் கிச் சென்றது. கோவி லிலே தாலி கட்டுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.



கார் கோவிலை நோக்கிச் செல் வதைக் கண்ட இருவரும் ஆச்சரியத்தால் மிரள விழித்தார்கள். 'டேய் கலியாணம் கோயில்லை வாடா கோயிலுக் குப் போவம்' என்றான் லப்பாம். உடனே இருவரும் கோவிலுக்குக் கிளம்பினார்கள்.

இவர்கள் கோயிலை அடைந்த போது மணப்பெண் போன சோடனைக் காரை டிரைவர் ஒரு மஞ்சள் நிறத் துணியால் துடைத்துக் கொண்டிருந்தான். பின் சீட்டை எட்டிப் பார்த்த டிரைவர் பின் கத வைத் திறந்து அதனையும் மஞ்சள் துணியினால் துடைத்துவிட்டு, அதைப் பொத்திக் கையில் வைத்துக் கொண்டான்.

அந்த வெள்ளை நிறக்கார் துடைத்த பின்பு மிக அழகாக இருந்தது. அதை வேடிக்கை பார்த்த லப்பாம், டம்பாம் அந்த மஞ்சள் துணியை வினோதமாகப் பார்த்தார்கள். 'கொழும்பு மாமா சைக்கிள் தந்தா இப்படி மஞ்சள் துணியாலைதான் துடைக்கணும்' என்றான், லப்பாம். டப்பாம் ஆசையோடு அந்தத் துணியைப் பார்த்தான்.

கோயிலில் இருந்து மேளச் சத்தம் கேட்கவே இருவரும் போய்ப் பார்த்தார்கள். தாலி கட்டி முடிந்ததும் கற்கண்டு பரிமாறப்பட் டுக் கொண்டிருந்தது அவர்களின் கவனத்தை ஈர்த்தது.



லப்பாம் ஓடிப்போய் கற்கண்டு வாங்கி னான் அவனைத் தொடர்ந்து டப்பாமும் வாங்கினான்.

எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்த அந்த நேரத்தில் மாப்பிள்ளையின் தாயார் மட் டும் முகம்கடுகடுக்க எரிமலை போல் குமுறிக் கொண்டிருந்தாள். 'ஐப்பதுனா யிரத்துக்கு நகை போடறதாச் சொன் னாங்க. பெண் வெறும் கழுத்தோட வந்தி ருக்கு' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் தாயாருக்கு அதிர்ச்சியாக இருந்தது. மகளின் கழுத்தைப் பார்த்தாள். தலையில் இடிவிழுந்தது போல் இருந்தது. வீட்டில் இருந்து புறப்படும்போது இருந்த வைர நெக்லஸ் இப்போது மகளின் கழுத்தில் இல்லை. பதறிப்போய் மகளைக் கேட்டாள். கழுத்தைத் தடவிப் பார்த்த மணப்பெண் திகைத்துப் போய் நின்றாள்.

வைரநெக்லசைக் காணவில்லை என்ற செய்தி எங்கும் பரவியது. எல்லோரும் தேட ஆரம்பித்தனர் எங்கும் தேடியும் அகப்படவில்லை.

பதட்டத்துடன் செய்வதறியாது இரு பகுதியினரும் செயலிழந்து நின்றபோது ஒருவர் சொன்னார் 'லப்பாம் டப்பாம் தான் கண்டுபிடிப்பார்கள் அவர்களைப் பிடியுங்கோ.'

வைர நெக்லஸ் களவுபோன விடயமோ, அதனால் கோயிலில் ஏற்பட்ட ஆரவாரமோ ஒன்றுமே தெரியாது மூன்று முறைக்கும்மேல் கற்கண்டு வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த இருவருக்கும் 'அவர்களைப் பிடியுங்கோ' என்று சொன்னது மட்டும் தெளிவாகக் கேட்டது.

கற்கண்டு வாங்கிச் சாப்பிட்டதற்குத் தங்களைப் பிடிக்கப் போகிறார்கள் என்று எண்ணிப் பயந்து வெளியே ஓட அவர்கள் எத்தனிக்கும் போது "இங்கே இருக்கிறார்கள்" என்று ஒருவர் அன்புடன் கையைப் பிடித்தார்.

கற்கண்டையும் பறித்து அடியும் உதையும் தரப்போகிறார்கள் என்று நினைத்த இருவரும் மிரள, மிரள விழித்ததார்கள்.

'தம்பிமாரே நீங்கள் தான் திருட்டுப் போன வைர நெக்லசைக் கண்டு பிடித்து உதவ வேணும். உங்களைத்தான் நம்பியிருக்கிறோம்' என்று கெஞ்சினார் பெண்ணின் தந்தை.



**அமரர். வில்வம் பசுபதி**



லப்பாம் டப்பாமிற்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ கனவுபோல் இருந்தது. கற்கண்டுடன் வீட்டிற்குப் போனால் போதும் என்று எண்ணியவண்ணம் தலையை ஆட்டிவிட்டு மெல்ல வெளியே வந்தார்கள்.

அங்கு நின்றவர்கள் இவர்களை ஏதோ பிராணிகளைப் பார்ப்பது போல் வினோதமாகப் பார்த்தார்கள். இந்த மூடப் பையன்களாவது துப்பறிகிறதாவது என்று எண்ணிச் சிரித்தார்கள்.

கோயிலை விட்டு வெளியே வந்த இருவரும் வெளியே நின்ற சோடனைக் காரை வேடிக்கை பார்த்தனர். டிரைவரின் சீட்டில் பார்சல்போல் சுருட்டிக் கட்டப்பட்டிருந்த மஞ்சள் துணிமேல் லப்பாமின் கவனம் சென்றது. திரும்பிப்பார்த்தான். டிரைவர் பீடிகுடித்துக் கொண்டிருந்தார்.

**டிரைவர் அடிக்கப் போகிறான் என்ற எண்ணத்தில் பயம் நெஞ்சைக் கவ்வ மஞ்சள் துணியுடன் ஓடினான்**

அந்த மஞ்சள் துணியைப் பொத்தி எடுத்து 'அண்ணே என்ரை சைக்கிள் துடைக்க எடுக்கிறன்' என்றான் லப்பாம்.

தலையில் ஷெல் விழுந்ததுபோல் அதிர்ச்சியடைந்த டிரைவர் 'டேய் கொண்டா அதை' என்று சத்தம் போட்டபடி அவனை நெருங்கினார். டிரைவர் அடிக்கப் போகிறான் என்ற எண்ணத்தில் பயம் நெஞ்சைக் கவ்வ மஞ்சள் துணியுடன் ஓடினான் அவனைத் தொடர்ந்து டப்பாமும் ஓடினான்.

டிரைவர் துரத்த, இவர்கள் ஓட அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றவர்கள் நடந்தது தெரியாது வேடிக்கை பார்த்தனர்.

பெண்ணின் தகப்பன் வெளியில் ஏதோ ஆர வாரம் என எண்ணி வெளியே வந்தார். பயத் தினால் தலை தெறிக்க ஓடிவந்த லப்பாம் டப்பாம் இருவரும் அவர்மேல் மோதி முகம் குப்புற விழுந்தார்கள்.

அவர்கள் விழுந்த வேகத்தில் ல்ப்பாம் கையில் இருந்த மஞ்சள் துணியினாலான பொதி நிலத்தில் சிதறிவிழுந்தது.

அதிலிருந்து வைர நெக்லஸ் நிலத்தில் விழுந்து ஜொலித்தது.

அதைக் கண்ட அனைவரும் அதிர்ச்சியும், ஆனந்தமும் மேலிட அதை எடுத்துப் பெண்ணின் தகப்பனாரிடம் கொடுத்தனர்.

லப்பாம் டப்பாமைத் துரத்திவந்த டிரைவர் நடந்ததைக் கண்டு செயலற்றுச் செய்வதறியாது நின்றார். வைர நெக்லஸ் அகப்பட்டதையோ, மணமகளின் தகப்பன் அதைக் கையில் வைத்திருப்பதையோ அறியாத இருவரும் டிரைவர் அடிக்கப் போகிறான் என்ற பயத்தில் எழும்பாது அப்படியே இருந்தார்கள்.

அவர்களைத் தூக்கி பெண்ணின் தகப்பனார், ‘டிரைவர் நெக்லஸ் எடுத்ததைத் துப்பறிந்து பிடிச்சிட்டியள். உங்களுக்குத் தகுந்த சன்மானம் தருவேன்’ என்று சொல்லி ஆரத்தழுவினார்.

இருவரும் அசட்டுச்சிரிப்புடன் கற்கண்டை வாயில் போட்டபடி வீடு நோக்கிப் போனார்கள். பொலிசில் ஒப்படைக்கப்பட்ட டிரைவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டான். கார் பின்சீட்டில் நெக்லஸ் இருந்ததாகவும், இதை எடுத்து ஒளித்து வைத்ததாகவும் கூறினான்.

லப்பாம் டப்பாம் மட்டும் இல்லாவிடில் இந்தத் திருட்டைப் பிடித்திருக்கவே முடியாது’ என்றுகூறி அவர்களுக்குப் பாராட்டும் சன்மானமும் வழங்கினார் பொலிஸ் இன்ஸ்பெக்டர்.,“’



# குறும்பு பண்ணாதே குட்டித்தம்பி!



குட்டித்தம்பி குட்டித்தம்பி
குறும்பு பண்ணாதே - உந்தன்
சுட்டித்தனம் காட்டி இங்கே
குறும்பு பண்ணாதே.


அம்மா அப்பா சொற்கேட்டு
வாழ வேண்டும் நீ!
அனைவருமே போற்றிடுவர்
நாளும் உன்னையே.

ஆசானை நித்தமும் நீ
வணங்கிடல் வேண்டும்
அறிஞனாக உலகத்திலே
வலம்வர வேண்டும்.

இறைவனிலே நம்பிக்கை
உனக்கு வேண்டும்
இல்லை என்று சொல்லாது
அருள் புரிவாரே.

■ நிவேதிதா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வார்த்தை விளையாட்டு

## வார்த்தைகளை உருவாக்குவோம்.



| | | |
|---|---|---|
| த | ர | கு |
| ஞ் | ச | ம |
| சு | ம் | ப |

மேலே தரப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய அதிக எண்ணிக்கையான அர்த்தமுள்ள சொற்களை உருவாக்கும் அதிஸ்டசாலிகள் மூவருக்கு, அர்ச்சுனா சிறுவர் இதழ்களை இலவசமாக அனுப்பி வைப்போம்.

| | |
|---|---|
| முதலாவது அதிஸ்டசாலி | - அடுத்துவரும் மூன்று மாத அர்ச்சுனா இதழ்களை இலவசமாகப் பெற்றுக் கொள்வார். |
| இரண்டாவது அதிஸ்டசாலி | - அடுத்துவரும் இரண்டு மாத அர்ச்சுனா இதழ்களை இலவசமாகப் பெற்றக் கொள்வார். |
| மூன்றாவது அதிஸ்டசாலி | - அடுத்துவரும் ஒரு மாத அர்ச்சுனா இதழினை இலவசமாகப் பெற்றுக் கொள்வார். |

**வார்த்தைகள் யாவும் அழகாக எழுதப்பட்டு, கீழே தரப்பட்டுள்ள அர்ச்சுனா இதழின் முகவரி இடப்பட்ட படிவத்தை இணைத்து 20.12.2011ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் வகையில் உங்கள் முகவரியுடன் அனுப்பி வையுங்கள். நீங்கள் கற்கும் பாட சாலையைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.**

**வார்த்தை விளையாட்டு – 2**
**அர்ச்சுனா**
**361, கஸ்தூரியர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டறியாதது

## " வெப்பமானி "



**கந்தையா**
மனிசிக்குக் காய்ச்சல் மருந்து
கலப்பித்தேன்
கலவைக்கும் நிற்காத கடுங்காய்ச்சல்
பாவமவ
கஞ்சியும் குடியாவாம் கடுமைக்கு
அனுங்குகிறா
நெற்றியிலே கைவைத்தால் நெருப்பாய்ச் சுடுகிறது.

**வடிவேலு**
எத்தனையிற் காய்ந்ததெனச் சொல்லாமல் ஏதேதோ
சுற்றி வளைக்கிறியே சுணங்காமல் வா விரைவாய்
உடல்வெப்ப மானி யொன்று என்னிடத் திருக்கிறது
உன் மனையாள் வெப்பநிலை அதனால் அறிந்திடலாம்.

**கந்தையா**
ஆசுப்பத் திரியிலேநான் அடிக்கொருக்கால் கண்டிருப்பன்
நேசுப்பெட் டைகள் வந்து காய்ச்சல் அளப்பதனை.
கண்ணாடிக் குழாய்க்குள்ளே கச்சிதமாய்ச் செய்துவிட்டான்
என்னவித மாக இது உடல்வெப்ப நிலை காட்டும்?

**வடிவேலு**
இரசவிழை இதற்குள்ளே இருப்பதனைப் பார்த்தாயா?
சூடுற்ற பதார்த்தங்கள் விரிவடைதல் அறிவாய் நீ;
விரிவடையும் பாதரசம் மேலேறிச் சென்றிடுமே.

**கந்தையா**
வாயாலே எடுத்தவுடன் குளிரடைந்து சுருங்குவதால்
தானாகக் கீழிறங்கி வரமுடியா வகையெதுவோ?

**வடிவேலு**
பாதரசக் குமிழின்மேல் இரசவிழை யினிலே ஓர்
சுருக்கம் இருப்பதனால் எழுந்துசென்ற பாதரசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டுவர முடியாது நிலையாக நிற்கிறது;
சரியான வெப்பநிலை வாசிக்க முடிகிறது.

**கந்தையா**
குலுக்கித்தான் பின்னர் குமிழுக்குள் விடுவாரோ?

**வடிவேலு**
உனக்கெல்லாம் தெரிகிறதே! அப்படித்தான்
மேலேகேள்
பனிக்கட்டி உருகுகிற வெப்பநிலை அதுவேதான்
கீழ்நிலைத்த புள்ளியாம் மேல்நிலைத்த புள்ளியது
கொதிநீரின் ஆவி கொடுக்கின்ற வெப்பநிலை.
உடல்வெப்பம் அளக்கவென உருவத்தில் மிகச்சிறிது
தொண்ணூற்றைந் தில்தொடங்கி நூற்றுப்பத்
தாகுமட்டும்
பரனைற்று முறையினிலே பாகை பதிந்திருக்கு.

**கந்தையா**
அவ்வளவும் போதுமோ சாகாத சடலத்தின்
வெப்பநிலை பார்க்க?

**வடிவேலு**
விஷயம் அவ்வளவுதான்.

**கந்தையா**
சுகமான தேகத்தின் வெப்பநிலை எவ்வளவு?

**வடிவேலு**
தொண்ணூற்றெட் டுத் தசம் நால் பாகை பரனைற்றே
சாதா ரண மனிதன் சராசரி வெப்பநிலை.


**கந்தையா**
நித்திரையே தான் மனிசி; நீ பிறகாய் அவவுடைய
காய்ச்சல் அளந்து சொல்லு கண்ணயர்ந்து
தூங்கட்டும்.


**வடிவேலு**
ஓடிக்குளோன் சீலையினை உலரவிடக் கூடாது
இலாம்பைத் தணித்துவிட்டே இங்காலே
வந்திரண்ணை.
நாம்பன் குளறிடுதே நான் வைக்கோல் போடுகிறென்.

**கந்தையா**
மின்சூளைக் கொண்டுபோ மினுமினுத்து வழி
காட்டும்
அமாவாசை இருட்டின்றே அடுப்புக் கரி இருட்டு.



இ. சிவானந்தன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிலத்தின் கீழ் நீரூற்றுக்களைக் கண்டுபிடிக்கும் தடி

## (Divining Rod)




நமது விஞ்ஞானிகளின் அறிவுக்கு அப்பாற்பட்ட பல காரியங்கள் இருக்கின்றன. நிலத்தின் கீழ் ஓடும் நீரூற்றுகளைக் கண்டு பிடிக்கும் இயற்கையான ஆற்றல் சிலரிடம் இருக்கின்றது. இவ்வாற்றல் அவர்களிடத்திற் காணப்படுவதற்குக் காரணங் கூறமுடியாது. சிலரால் நிலத்தின் கீழ் உலோகப் பொருள் இருப்பதைக் கூறமுடியும்; சிலரால் நீர் இருப்பதைக் கூறமுடியும். சிலரால் அவை இவ்வளவு ஆழத்தில் இருக்கின்றன என்று கூறமுடியும். பத்துப் பேரில் ஒருவருக்கு இவ்வாற்றல் உண்டென்றும் அவர் தமக்கு இவ்வாற்றல் உண்டென்பதை அறிவதில்லை என்றும் சொல்லப்படுகின்றன. மேல் நாடுகளில் நிலத்தின் கீழ் உள்ள நீரூற்றுகளைக் கண்டு பிடிப்பவன் கையில் கவருள்ள ஒரு தடியை வைத்திருப்பான். அவன் மறைந்திருக்கும் நீர் அல்லது உலோகத்துக்குக் கிட்டச் சென்றதும் கையிலிருக்கும் தடி நடுங்குகிறது. கிணற்றுக்கு நிலையம் போடுகிறவர்கள் எனச் சிலர் நமது நாட்டிலுமுள்ளனர். தமிழ் இலக்கியங்களிற் கூறப்படும் கூவநூலார் என்போர் இவ்வகையினராகலாம்.


**கீழே உள்ள 3 படங்களில் ஒன்று மட்டும் வித்தியாசமாக உள்ளது. கண்டுபிடியுங்கள்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான்கு குரங்குகள் அதன் கூட்டிலிருந்து தப்பித்து விட்டன.**
**உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா...?**



மாணவர்களே. உங்கள் பாடசாலை உங்களின் கல்விக்கோயில் அதன் சிறப்புக்களை போற்றவும் கல்விக்காய் உழைக்கும் உங்களின் அதிபர் ஆசிரியர்களைப் பாராட்டி அவர்பணிகளை மதித்தொழுகவும் வேண்டியது உங்கள் கடன்.

அர்ச்சுனாவுக்கு, "எங்கள் பாடசாலை" எனும் தலைப்பில் நீங்கள் எழுதும் கட்டுரைகளை உடனே அனுப்பி வையுங்கள்.

சிறந்த கட்டுரைகள் அர்ச்சுனாவில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளுடன் உங்கள் பெயர் விபரங்களுடன் கூடிய அழகிய புகைப்படம் ஒன்றினையும் இணைத்துவிடுங்கள். உங்கள் ஆக்கங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்
அர்ச்சுனா.

எங்கள் பாடசாலை
361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில் சிவசுப்பிரமணியம்
தமிழில் : ஜெகன்



# தென் ஆபிரிக்காவில் தமிழர்கள்.

தென் ஆபிரிக்காவில் தமிழரின் குடியேற்றம், 1860 ஆம் ஆண்டளவில் இடம் பெற்றது ஒப்பந்தக் கூலி வேலைகளுக்கான முதல் அணியில் 340 தமிழர்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டதில் இருந்து ஆரம்பமாகியது. தற்பொழுது இங்கு 250,000ற்கும் அதிகமான தமிழர்கள் பல நகரங்களிலும் பரந்து வாழ்கின்றனர். நடால் மற்றும் டேர்பன் நகரங்களில் தமிழர்களின் குடியிருப்புகள் அடர்த்தியாகக் காணப்படுகின்றன. இங்கு, 140 வருடங்களாக அவர்கள் வாழ்ந்தமையால் தமிழர் மரபுகள் மற்றும் அவர்களை அடையாளங்காணக் கூடிய வகையிலான பரஸ்பரச்சார்புநிலை மற்றும் ஒத்துணர்வு கொண்டவர்களாகப் பரிணமிக்கின்றனர், இது தமிழர்களுக்கான மறு மலர்ச்சிக்காலமாக விளங்குகின்றது! அத்துடன் தமிழர்கள் தமது பழைய மரபுகள் குறித்துப் பெருமிதம் அடைகின்றனர். தமிழர் கலாசார நிறுவனங்கள் தமிழர் தம் மொழியின் அழகினை நன்னிலை அடையச் செய்வதில் பெரும் உதவி புரிகின்றன.



காவடித் திருவிழாக்கள், தமிழ் நாடகங்கள், இந்துசமய திருவிழாக்கள் என்பன தமிழர்களின் தனித்துவத்தை மேம்படுத்தியுள்ளன. 1900 இல் இருந்து 1949 ஆண்டுவரைப்பட்ட காலப்பகுதியில் இந்து ஆலயங்கள் பல இங்கு கட்டப்பட்டன. அத்துடன் சிறீலங்காவிலிருந்து வந்திருந்த பிராமணக் குருமாரினால் தமிழ்க் கலாசாரங்களுக்கும் ஊட்டமளிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் அகிம்சாவழிப் போராட்டங்களுக்கு இம்மக்களின் பெரும் ஆதரவும், எழுச்சியும் கிடைத்தன. அவர்களது ஆதரவிற்கும் அன்பிற்கும் தமிழில் நன்றி தெரிவிப்பதற்காக காந்தி அடிகளார் தமிழைக் கற்றுக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுத்தார் எனின் அவர்கள் மீது காந்தி கொண்டிருந்த பற்றிற்கு அளவேயில்லை.

இங்ஙனம், காந்திக்கு ஆதரவு தெரிவிப்பதில் முன்னோடியாக விளங்கிய இளம் பெண்மணியான 18 வயதுடைய தில்லையடி வள்ளியம்மையை இங்கு நினைவு கூருதல் சாலப் பொருத்தமானது. அவர் போராட்டத்திற்கு ஆதரவளித்தமைக்காகச் சிறையிலடைக்கப்பட்டார். இன்றும் தமிழ் நாட்டிலும் தென் ஆபிரிக்காவிலும் அவரது நினைவு நாள் பெருவிழாவாக

# புலம்பெயர் தமிழர் பரம்பல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றது.


இவற்றிற்கெல்லாம் அப்பால் தென் ஆபிரிக்க இளைஞன் ஒருவன் கர்நாடக இசையின் மீது கொண்ட பற்றுதலால் இந்தியாவின் பிரபல பாடகரான டாக்டர் கே.ஜே.ஜேசுதாஸ் அவர்களின் வீட்டில் அவரது காலடியில் மூன்று



வருடங்களாகப் பயின்று இன்று அவரது இசையரங்குகள் உலகளாவிய ரீதியில் அவரது குருவாகிய டாக்டர். கே.ஜே.யேசுதாசைப் பிரதிபலிப்பதாகவும் அவரை உலகில் கர்நாடக இசையில் ஓர் புகழ் பெற்ற கலைஞராகவும் விளங்கவைத்துள்ளது.

# வர்ணம் தீட்டி வடிவத்தைக் காணுங்கள்

**இலக்கம் 2 என குறிக்கப்பட்டுள்ள பகுதிக்கு சிவப்பு நிறமும் ,**
**இலக்கம் 3 என குறிக்கப்பட்டுள்ள பகுதிக்கு நீல நிறமும் என வர்ணம் தீட்டுங்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்

நிறம் தீட்டி மகிழுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்னொரு காலத்தில் தாய் தந்தையரான பன்றிகள் இரண்டும் மூன்று குட்டிகளும் ஒரு சிறு வீட்டில் வசித்து வந்தன. சிறிய குட்டிகளான மூன்று பன்றிகளும் தமது தாய் தந்தையருடன் சந்தோசமாவும் சுதந்திரமாகவும் சேர்ந்து பழகி வந்தன. ஒருநாள் தாய்ப் பன்றி தனது குட்டிகளை அழைத்து நீங்கள் இப்பொழுது சிறியவர்கள் அல்ல. நன்றாக வளர்ந்து விட்டீர்கள். இந்தச் சிறிய வீட்டில் நாங்கள் எல்லோரும் ஒன்றாக வசிக்க இயலாது. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கான வீடு ஒவ்வொன்றைத் தனித்தனியாகச் சுதந்திரமாக அமைத்துக் கொள்ளுங்கள் எனக் கேட்டுக் கொண்டது அதனைக் கேட்ட பன்றிக்குட்டிகள் வீடு கட்டப் புறப்பட்டன.



# மூன்று பன்றிக் குட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த குட்டிப் பன்றி பல நாட்கள் முயற்சி செய்து ஓலையினால் வீடொன்றைக் கட்டி முடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.ஒரு நாள் ஓர் ஓநாய் மூத்த பன்றிக் குட்டியின் வீட்டின் அருகே வந்து வீட்டின் கதவிலே தட்டி உள்ளே வரலாமா? எனக் கேட்டது. வந்திருப்பது ஓநாய் என்பதை அறிந்த பன்றிக்குட்டி கதவைத் திறக்க மறுத்தது. அதனால் கோபமடைந்த ஓநாய், ஓலையால் கட்டப்பட்ட மூத்த பன்றிக்குட்டியின் வீட்டைச் சிதைத்து அழித்துப் பன்றிக்குட்டியைப் பிடிக்கத் துரத்தியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதைக் கண்டு பயந்த மூத்த பன்றிக்குட்டி அங்கிருந்து தப்பி ஓடி இரண்டாவது பன்றிக்குட்டியின் வீட்டில் தஞ்சமடைந்தது. துரத்திவந்த ஓநாய் அந்த வீட்டின் கதவைத் தட்டி நான் உங்களுக்கு உதவுவதற்காகவே வந்திருக்கிறேன் கதவைத் திறவுங்கள் எனக் கேட்டது. அதற்குப் பன்றிக்குட்டிகள் மறுப்புத் தெரிவித்ததால் கோபத்துடன் மூங்கிலால் கட்டப்பட்ட அந்த வீட்டைப் பலங்கொண்ட மட்டும் அடித்து உடைத்தது. அதனால் பயந்த பன் றிக்குட்டிகள் அங்கிருந்து ஓடித் தங்கள் இளைய சகோதரனின் கல்வீட்டுக்குள் புகுந்து கதவை அடைத்துக் கொண்டன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அங்கேயும் துரத்தி வந்த ஓநாய் கதவைத் திறக்கும்படி கோபத்தோடு சத்தமிட்டது. பன்றிக்குட்டிகளோ கதவைத் திறக்கவில்லை. வீட்டை உடைத்துச் சிதைக்க ஓநாய் முயற்சித்தது அது இயலாமல் போனமையால் வீட்டுக் குசினியின் மேல் இருந்த புகைபோக்கியின் மூலம் வீட்டுக்குள் நுழைய எத்தனித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை அறிந்துகொண்ட பன்றிக்குட்டிகள் அடுப்பில் எண்ணெய்ச் சட்டியை வைத்து அதற்குத் தீ மூட்டினர். அதனை அறியாமல் புகை போக்கியின் ஊடாக உள்ளே நுழைய முயற்சித்த ஓநாய் கொதிக்கும் எண்ணெயில் வீழ்ந்து இறந்தது.

பன்றிக் குட்டியின் உறுதியான வீடும் புத்திசாலித்தனமான தந்திரமுமே அவைகளின் உயிரைக் காப்பாற்றியது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 1 தொடக்கம் 14 வரை உள்ள எண்களை இணைத்து உருவமாக்குங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "லோங் ஐலண்ட்" புயலின்

**1938** ஆம் ஆண்டுகாலப்பகுதி, அமெரிக்காவின் வட கிழக்காக உள்ள 'லோங் ஐலண்ட்' என்றழைக்கப்படும் இடத்தில் தனது வீட்டில் உள்ள வானொலியில் "புளோரிடாவை நோக்கி புயல் வந்து கொண்டிருக்கிறது" என்று வானிலை அவதான மையத்தினால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை அறிவித்தலை ஜெனிஸ்கெலி செவிமடுத்தாள்.

ஆனால் அவளது சிந்தனை வேறு விடயங்களில் ஆழ்ந்திருந்தது. புளோரிடாவில் இருந்து 'லோங் ஐலண்ட்' வட கிழக்குக் கரையோரமாக வெகு தொலைவில் அமைந்து இருந்தது.

அவளது சிந்தனை முழுவதும் கட்டிடத் தொகுதியை அடிக்கடி சுற்றிவர விரைந்தோடிக் கொண்டிருக்கும் எலிகளைப் பற்றியதாகவே இருந்தது. ஜெனிஸ் எலிகளை வெறுத்தாள். அவளது கணவர் அவற்றினை ஒழித்துக்கட்டும் வரையில் அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

புளோரிடாவில் மக்கள் தங்களது வீடுகளுக்குள் சென்றுகொண்டிருந்தனர். புயல் என்பது அங்கு ஒரு பொதுவான சம்பவம் ஆனால் அவர் வேலைகளைச் செய்து கொண்டிருக்கையில் புயல் திசையை மாற்றியது. முதலில் அது தீங்கு ஏதும் ஏற்படுத்தாதவகையில் கடலை நோக்கிச் செல்வதாகக் காணப்பட்டது. பின்னர் அது வடக்காகத் திரும்பி ஒருமித்த வேகத்துடன் 'லோங் ஐலண்ட்' நோக்கி விரைந்து அதிவேக ரயிலைப் போன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்
■ ஜெகன்

வந்தது.

அது வந்த வேகத்தில் தாக்கியதும் ஆச்சரியத்துக்கிடமான வகையில் வானுயர்ந்த கட்டிடங்களை அடியோடு சாய்த்துப் பிரட்டி, அத்துடன் வீடுகளை இடித்துத் தள்ளி ஒரு சாலை உருளையினால் நொருக்கியது போலத் தோன்றும் வகையில் செய்தது. இப்புயல் ஆரம்பமாகிய வேளையில் அதன் வேகம் மணிக்கு 96 கிலோ மீற்றராக இருந்ததாகவும் பின்னர் படிப்படியாக அதிகரித்து தீவினை அடைந்த வேளையில் அதன் வேகம் மணிக்கு 290 கிலோ, மீற்றராகவும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அதுமட்டுமல்லாது ‘லோங் ஐலன்ட்’ தீவு அதற்கு முன்னர் 100 வருடங்களுக்கு மேலாக புயல் எதனாலும் பாதிப்புறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

தீவிலுள்ள குடும்பத்தினர் பலர் கடற்கரையில் தமது பிள்ளைகள் மணலில் மாளிகைகளைக் கட்டி விளையாடுவதை அவதானித்தவண்ணம் தமது பொழுதை உல்லாசமாகக் களித்தனர்.

கடலில் சற்றுத் தொலைவில் அலைகளின் மீது காற்றுத் திடீரென மோதிப் பாரிய பிரமாண்டமான அலைகளை உருவாக்கியது. கடற்கரை ஓரமாக நின்றிருந்த மக்கள் அந்த அலைகளைப் பார்க்கும்படி தமது நண்பர்களை அழைத்தனர்.

திடீரென 40அடி உயரமான இராட்சத அலையொன்று கரையை நோக்கி வேகமாக வந்தது. அது கரையுடன் மோதி அங்கிருந்த ஒவ்வொருவரையும் வாரிச் சுருட்டிக் கொண்டு சென்றது.

கடல் வெள்ளம் தீவினுள் புகுந்து, கடலோரமாக இருந்த நகரத்தை மூழ்கடித்தது. மக்கள் வெள்ள நீரில் வீசி எறியப்பட்டனர். உயர்வான கட்டடங்களில் இருந்தவர்களினால் சிலர் காப்பாற்றப்பட்டனர். தமது படுக்கை விரிப்பு மற்றும் நீண்ட துணிகளை கீழே தொங்கவிட்டு அவற்றின் மூலம் அவர்களை மேலே இழுத்தெடுத்துப் பாதுகாப்பளித்தனர்.

புயற்காற்று ரயில்களைத் தடம் புரளச் செய்தும் வீதிகளை பிளந்தவண்ணமும் ஏழு நாடுகளைக் கடந்து வந்துள்ளது. கார்களின் ஒலி எழுப்பிகள் யாவும் ஒலி எழுப்பத்தொடங்கின. அதனுடன் வெகுண்டெழும் காற்றின் அலறல்களும் சேர்ந்து ஒலித்தன. ரயில் ஒன்று தடம்புரண்டு கடல் நீரில் மூழ்கத் தொடங்கியது. அதிஸ்டவசமாகச் சகல பயணிகளும் தப்பிவிட்டனர். சில இடங்களில் கடல் அலைகளின் வேகமும், பலமும் கடலோரத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரிப்பை ஏற்படுத்தி அதன் வடிவமைப் பையே நிரந்தரமாக மாற்றியமைத்துவிட் டது.

ஜெனிஸ் கெலியும் அவளது கணவரும் உயர்ந்து கொண்டே வரும் நீர் மட்டத்திலிருந்து தப்புவதற்கு அவர்களுடைய வீட்டின் கூரைமீதேறி அசையாது அதனைப் பற்றிப் பிடித்த வண்ணமிருந்தனர். கூரையின் மீது தஞ்சம் கோரிய அவர்களுடன் மூன்று எலிகளும் ஒரு பாம்பும் கூரையிலே இருந்தன. ஜெனிஸ் அதனைப் பார்த்துக் கடும் அதிர்ச்சியுற்றாள். அவளுக்கு எலிகள் என் றால் வெறுப்பு! ஆனால் சீறும் புயல் அவளை அதனை விட அச்சுறுத்தியது.

ஊடுருவிச் செல்லும் பலத்த சப்தத்துடன் காற்று வீட்டின் கூரையைக் கிழித்தது! ஒரு சுழற்றுச் சுழற்றி தம்பதியினரைக் கூரை யுடன் விரிகுடாவின் ஒதுக்கிடமொன் றிற்கு வீசியெறிந்தது. அவர்கள் மரண பயத்தினால் கண்களை மூடியபடி இருந் தனர். திடீரென இருவரும் தொப்பென ஒரிடத்தில் கூரையுடன் வீழ்ந்தனர். அது ஒரு 'கொல்வ்' விளையாட்டு மைதானம்.

ஜெனிஸ் அங்கிருந்தபடியே அவர்களது வீடு அமைந்திருந்த குடாப் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். வீடுகள் யாவும் தரைமட்டமா கியிருந்தன. கார் தலை கீழாகப் புரட்டப்பட் டும், பாதியளவில் சேற் றில் புதையுண்டும் காணப்பட்டது. மரங் கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டிருந்தன. வியக்கத்தக்க விதத்தில் அவர்களையும் அவர்களுடன் ஒண்டியி ருந்த பிராணிகளையும் கூரை உயிர்காக் கும் படகாகப் பயன்பட்டுக் காப்பாற்றி யது, அதிசயத்திலும் அதிசயமே!


புயல் ஆயிரக்கணக்கானோரின் வாழ் வினை அதிர்ச்சிக்கும், நிலைகுலைவிற்கும் உள்ளாக்கியது. 60,000மக்கள் வீடுகளை இழந்தனர். இறந்தோர் தொகை 600ஐயும் தாண்டியது.. இப்புயல் மையம் கொண்ட திலிருந்து ஓயும் வரையில் 523கிலோ மீற்றர் (325மைல்கள்)தூரம் குறுக்காகப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இந்தப் புயல் 57000வீடுகளை அழித்தது டன் கிட்டத்தட்ட 275 மில்லியன் மரங் களை சாய்த்து விழுத்தியுள்ளது. ஓர் இடத் தில் வீடொன்றினை மேலே தூக்கி அரை மைல் தூரத்திற்குக் காவிச் சென்று போட் டுள்ளது. ஆனால் அவ் வீட்டின் யன்னல் ஒன்று கூட உடையவில்லை. கடல் உப் பினை 193 கிலோ மீற்றர்(120 மைல்) தூரம் காவிச்சென்று வீசியதில் அங்குள்ள வீடுகளின் யன்னல்கள் யாவும் வெள்ளை நிறமாகிவிட்டன.



## விடுகதைகள்

வேடிக்கையான விடு கதைகள் கேட்டு விளையாடுவது கிராமப்புறங்களில் காணப்படும் வழக்காகும். அவ்வாறு வழங்கி வரும் சில விடுகதைகளைப் பார்ப்போம்.



1. மழைக்காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள்
2. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்?
3. கல் வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார்?
4. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
5. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவர் யார்?
6. வெயிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன?
7. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
8. உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார் அவன் யார்?
9. வரும்போது வெண்சிவப்பு வளர வளரத் தகதகப்பு? போகும் போது கடும் சிவப்பு! அது என்ன?
10. ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டு போகிறார் அவர் யார்?

மோ.கெலன்யாழினி
பரி.யாக்கோபு முன்பள்ளி.

விடைகள் 42 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையாரின் ஆத்திசூடி

ஔவையார் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண் புலவர். வள்ளல் அதியமான் அளித்த நெல் லிக்கனியை ஔவையார் உண்டு நீண்ட காலம் வாழ்ந்தார் எனச் சொல்லப்படுகின்றது. அவர் இயற்றிய பிற நூல்கள் கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை முதலியன.



**கடவுள் வாழ்த்து**

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

**நூல்கள்**

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்ப திகழ்ச்சி.
9. ஐய மிட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவ தொழியேல்
12. ஔவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப்போல் வளை.
16. சனிநீ ராடு.
17. ஞயம்பட வுரை.
18. இடம்பட வீடெடேல்
19. இணக்கமறிந் திணங்கு.
20. தந்தைதாய்ப் பேண்.
21. நன்றி மறவேல்.
22. பருவத்தே பயிர்செய்.
23. மண்பறித் துண்ணேல்.
24. இயல்பலா தனசெயேல்.
25. அரவ மாட்டேல்.
26. இலவம்பஞ்சிற் றுயில்.
27. வஞ்சகம் பேசேல்.
28. அழகலாதன செயேல்.
29. இளமையிற் கல்.
30. அறனை மறவேல்.
31. அனந்த லாடேல்
32. கடிவது மற.

# பாட்டி



பாட்டி நானும் அழைக்கின்றேன்
பேரன் நீயும் ஓடி வா.
நல்ல நீதிக் கதைகளை நான்
நாளும் சொல்லுவேன்
அன்பு முத்தம் ஒன்று தா.

முதுமை என்ற வரம் ஏற்ற
முதியோர்களைப் பேணிடுவோம்
என்ற நீயும் முரசறைவாய்

இன்றியமையாச் சொத்திவர்கள்
இகழ்ந்து எவரும் பேசாதீர்
என்று நீயும் உரைத்திடவே
இன்றே புறப்படு துணிவுடனே

■ நிவேதிதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சுனா நவம்பர்

## வார்த்தை விளையாட்டு 2 முடிவுகள்




### 1ஆம் பரிசு

**அர்ச்சுனா 3மாத இதழ்களைப் பரிசாகப் பெறுபவர் -**

பே.விஸ்ணுகா
யா /யாழ் இந்து ஆரம்பபாடசாலை

### 2 ஆம் பரிசு

**அர்ச்சுனா 2மாத இதழ்களைப் பரிசாகப் பெறுபவர் -**

சி. வனோஜா
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

### 3 ஆம் பரிசு

**மூன்றாம் பரிசு**
**அர்ச்சுனா 1மாத இதழைப் பரிசாகப் பெறுபவர் -**

சவேனா
யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## பாராட்டுப் பெறுவோர்

ச. பிரவீன்
யா /யாழ் இந்துக் கல்லூரி




### வார்த்தை விளையாட்டு 2 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பா | பண்டம் | கமம் | விட்டம் | மண்டபம் |
| படம் | பாட்டம் | கடம் | பாவி | மட்பாண்டம் |
| பாடம் | கவி | கட்டம் | மடம் | பாண்டம் |
| பாண் | கண் | கபம் | மட்டம் | கண்டம் |
| பாகம் | கபடம் | விகடம் | மட்கடம் | விண் |
| பட்டம் | கபாடம் | விடம் | மகம் | மண் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயெஸ் கால்வாய்



இது மத்திய தரைக்கடலையும் செங்கடலையும் இணைக்கின்றது. இதை வெட்டுவதற்குப் பத்து ஆண்டுகளாயின (1859-1869). இதனை வெட்டி முடிப்பதற்கு இரண்டு கோடி பவுண் செலவாயிற்று. இதன் குறைந்த ஆழம் 28 அடி; அகலம் 150 அடி முதல் 300 அடி வரை இக் கால்வாயைக் கப்பல் கடப்பதற்கு 16 முதல் 17 மணி நேரமாகிறது. இதன் நீளம் 103 மைல். இக்கால்வாய் வழியாகக் கப்பல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் செல்வதால் 7,600 மைல் தூரம் சுருங்குகிறது. இதனூடாகக் கப்பல் செல்வதற்கு ஆயத்தீர்வை வாங்கப்படுகிறது. ஆயத்தீர்வையால் ஆண்டில் 30 இலட்சம் பவுண் கிடைக்கிறது. இதில் கிடைக்கும் இலாபம் சுயெஸ் கால்வாயைக் கட்டிப் பராமரித்த பங்காளருக்குக் கிடைத்தது. இதில் ஆங்கிலேயருக்கு அதிக பங்கு இருந்தது. இக்கால்வாயைக் காப்பதற்கு 10,000 ஆங்கிலப் போர் வீரர் நிறுத்தப்பட்டிருந்தனர். இப்பொழுது இது எகிப்து வசமுள்ளது. எகிப்திய ஜனாதிபதியாக இருந்த நாசர் (Nasser) இதை யூலை 26,1956-இல் தேசமயமாக்கிக் கொண்டார்.



# ஆகாய விமானம்



வானின் மீதெழுவேன் - உயர்ந்து
வட்டம் சுற்றிடுவேன்
கானின் மலைகடந்தும் - யானோ.
கணத்தில் சென்றிடுவேன்.

உலகில் பலரனுப்பும் - கடிதங்கள்
உடனே கொண்டு செல்வேன்.
சலிப்பே இல்லாமல் - மக்களைத்
தாங்கிப் பறந்திடுவேன்

நன்மை செய்யவந்தேன் - அதையோ
நன்றே உணராமல்
வன்மைப் போர்புரிய - என்னை
வசமாய் மாட்டிவிட்டார்.

■ அ.துஷாரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மானினம்



■ ஜெகன்

மானினத்தில் புள்ளிமான் என்றழைக்கப்படும் வகையைச் சேர்ந்த மான் இலங்கையில் மட்டுமே வசிக்கின்றது. இதனை 'தித்மூவா' எனச் சிங்களத்திலும் புள்ளிமான் எனத் தமிழிலும் அழைப்பர்.

இம்மான்களின் மயிர்களடங்கிய மேற்தோற்பகுதிகள் வெளிர் சிவப்பும் இளமஞ்சள் நிறமும் கலந்ததாகவும் அத்துடன் வெள்ளைப்புள்ளிகளுடனும் அவற்றின் உடல் அடிப்பாகங்கள் வெள்ளை நிறத்தையுடையனவாகவும் காணப்படும்.

இவற்றின் கொம்பு கள் வருடாவருடம் உதிர்ந்து விழுபவையாகவும், வழமையில் மூன்று கூறுகளையுடைய கூரிய முனைகளைக் கொண்டதாகவும் 75 சென்ரிமீற்றர் அளவில் நீண்டதாகவும் இருக்கும்.



வீடுகளில் வளர்க்கப்படும் மான்களுடன் ஒப்பிடுகையில் இவை மரபுவழி ஒத்தவையாக இருப்பினும் வளர்ச்சியில் பெரியவையாகவும் கொம்புகள் நீண்டவையாகவும் இருக்கின்றன. பெண்மான்கள் ஆணினத்தை விடச் சிறியவையாகும். பெரிய மூக்குத் துவாரங்களும் தோள் வரையில் 90சென்ரி மீற்றர் உயரமும் 85கிலோ பாரமும் உடைய இவற்றின் ஆயுட்காலம் கிட்டத்தட்ட 8 தொடக்கம் 14வருடங்களாகும்.

இம்மான்கள் உஸ்ணவலயங்களிலும் தாழ்வுநில வரண்டகாடுகளிலும், புல் வெளிகளிலும் வசிக்கின்றன. வரண்ட மலைப் பகுதிகளிலும் இம்மான்கள் காணப்படுகின்றன.

இவை புல்லை உண்ணுகின்றன. அத்துடன் இலைகளையும், பழங்களையும் உண்ணுகின்றன. குரங்குகள், மயில்கள், காட்டெருமைகள் மற்றும் மரைகளுக்கு நெருக்கமாக நின்றே இவை மேய்ச்சலில் ஈடுபடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

இவை காலையிலும் மாலையிலும் சுறுசுறுப்புடன் காணப்படும். எந்நேரத்திலும் நீர் நிலைகளை அண்டியே இவை காணப்படும்.

இவை 10 தொடக்கம் 60 வரையான எண்ணிக்கையையுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கூட்டமாகவும் சில கூட்டத்தில் 100வரையிலான எண்ணிக்கை கொண்ட மான்களும் இருக்கும்.

வைரமான கொம்புகளையுடைய ஆண் மான்கள் கொம்பில்லாத மான்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் கலைமான்கள் பெண்மான்களைக் கண்டதும் எருதைப் போன்று உறுமும்.

பெண்மான்கள் ஒரு தடவையில் ஒன்று அல்லது அரிதாக இரண்டு குட்டிகளை ஈனும். மேச்சலில் ஈடுபடும் வேளைகளில். அவை அமைதியாக இருக்கும்.

எனினும் அவைகள் ஒன்றையொன்று கடந்து செல்லுகையில் விநயமான தோரணையில் உச்சஸ்தானியில் ஒலியெழுப்பும் அபாயம் குறித்து எச்சரிக்கையுணர்வு கொள்ளும்போதில் ஒலியெழும்பும். ஆபத்து வேளைகளில் கூட்டம் கூட்டமாக அதி வேகத்துடன் ஓடிக் கலைந்தவுடன் ஏதேனும் மறைவிடங்களுக்குள் புகுந்து மறைந்துவிடும்.

இவ்வகைமான்களின் இனம் அண்மைக் காலத்தில் அருகிவருகின்றது. காடழிப்பும் இறைச்சிக்காக வேட்டையாடுதலுமே அச்சுறுத்தல்களாகும். சரித்திர ரீதியாக இலங்கையில் பெரும் எண்ணிக்கையான அளவில் மான்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. ஆனால் இவ் எண்ணிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துவிட்டன. இலங்கயின் சிறுத்தைகளுக்கு மான் முக்கியமான இரையாகும். அதேபோன்று கரடிகளுக்கும், நரிகளுக்கும் மான்கள் இரையாகின்றன. இன்று ஒரு சில ஆயிரக்கணக்கான மான்களே இலங்கையில் உள்ளன.


**மான் குட்டி தாயைத் தேடுகிறது.**
**1 தொடக்கம் 49 வரையுள்ள**
**எண்களை இணைத்து தாய் மானை கண்டு பிடியுங்கள்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முயல் ஒன்றினை வரைந்து பாருங்கள்



1 முட்டை ஒன்றை வரையுங்கள்




2 மேற்படி 2 முட்டைகளை மேலதிகமாக வரையுங்கள்




3 மேற்படி கால், காது, கண் என்பனவற்றை வரையுங்கள்


கீழே உள்ளவாறு நீங்கள் வரைந்து பயிற்சி பெறுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**இந்த மான் குட்டிகளுக்கு நத்தார் அங்கிளிடம் செல்வதற்கான வழியைக் காட்டுங்கள்.**

■ சிபிச்வை



செவிச்சோணைகள் தோலில் உரோமாங்கள். நான்கு வகைப் பற்கள் குழிகளுள் காணப்படல் ஆகிற புறத்தோற்ற இயல்புகள் காணப்படுகின்றன.

முலைச்சுரப்பிகள் காணப்படுகின்றன.

மேற்கண்டவை முலையூட்டிகளை இனங் காட்டும் இயல்புகள் ஆகும். இவை வௌவாலிலே காணப்படுவதால் அது முலையூட்டி ஆகும்.



**“வௌவால் பறந்த போதிலும் மூலையூட்டி ஆகும்”**

# கணக்குப்புதிர்

**உங்கள் வயதைச் சொல்வேன்**

உங்கள் நண்பரிடம், அவரின் வயதை அவரின் மனதினால் நினைக்கச் சொல்லுங்கள். அதனை 259 ஆல் பெருக்கச் சொல்லுங்கள். வரும் விடையை மீண்டும் 39 ஆல் பெருக்கச் சொல்லுங்கள். இப்பொழுது அவர் பெருக்கிப் பெற்ற சரியான எண்ணைச் சொல்லும்படி கேளுங்கள்.

அவர் தரும் விடை 232323ஆக இருப்பின் 23 என்பதை கண்டு சொல்லுங்கள். அதே போல் அடுத்தவர் சொல்லிய விடையைப் பாருங்கள் அது 191919 ஆக இருப்பின் அவரது வயது 19


நீங்கள் இப்பொழுது மற்றவர் மனதால் நினைக்கும் வயதைக் கணக்கிட்டுக் கூறும் திறமையைப் பெற்றுவிட்டீர்கள். உங்கள் நண்பர்களோடு இக்கணக்கை செய்து பாருங்கள்.

இக் கணக்குப்புதிரை அனுப்பியவர் அர்ச்சுனா வாசகர்

வி. சிந்துஜன், தரம் 9A
வேலணை மத்திய கல்லூரி
அவருக்கு எமது பாராட்டுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நட்புடன் உதவுவோம்

ஓர் ஊரிலே அருணணும் தீபனும் வாழ்ந்தார்கள். இவர்கள் இருவரும் ஒரே பாடசாலையில் தரம் ஆறில் படிக்கும் மாணவர்கள். இருவரும் ஒரே தரத்தில் ஒரே பாடசாலையில், ஒரு கிராமத்தில் இருந்தாலும் அருணன் மிகவும் ஏழை, தீபன் மிகவும் பணக்காரன். தீபன் ஒவ்வொரு நாளும் துவிச்சக்கர வண்டியிலேயே பாடசாலைக்குச் செல்வான். ஆனால் அருணனோ மிகவும் ஏழை என்பதால் அவனிடம் துவிச்சக்கர வண்டி இல்லாமையால் பேரூந்திலேயே பாடசாலைக்குச் செல்வான். அருணன் பாடசாலைக்குச் செல்வதற்கு ஒரு நாள் பேரூந்து வர வில்லை. எனவே அருணன் தீபனிடம் ஓடிச் சென்று தன்னையும் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு ஏற்றி செல்லுமாறு கூறினான். தீபனோ "நான் ஏத்த மாட்டேன் நீ மிகவும் மொத்தம் என்பதால் சைக்கிளில் ஏறினால் என்னால் சைக்கிளை ஓட்ட முடியாது" என்று கூறினான். அதனால் அன்று அருணன் பாடசாலைக்குச் செல்லவில்லை. சில நாட்களின் பின் அருணனின் மாமா லண்டனிலிருந்து வந்த போது அருணனுக்கு மிகவும் அழகான துவிச்சக்கர வண்டியொன்றை வாங்கி வந்திருந்தார். இதைப் பார்த்து மகிழ்வடைந்த அருணன் ஒவ்வொரு நாளும் துவிச்சக்கர வண்டியிலேயே பாடசாலைக்குச் செல்வது எனத் தீர்மானித்தான். அதன்படி ஒவ்வொரு நாளும் துவிச்சக்கர வண்டியிலேயே பாடசாகைக்குச் சென்றான். ஒரு நாள் பாடசாலைக்குச் செல்வதற்காக ஆயத்தமான தீபன் துவிச்சக்கர வண்டியை வந்து பார்த்த போது சில்லின் ரயரில் காற்று இல்லாமையால் மிகவும் அதிர்ச்சியடைந்தான். உடனே அருணணிடம் ஓடிச் சென்ற தீபன் எனது சைக்கிள் காத்துப்போய் விட்டதால் என்னைச் சைக்கிளில் பாடசாலைக்கு ஏத்திச் செல்லுகிறாயா? என்று கேட்டான். அதற்கு எதிர்த்துப் பதில் எதுவும் பேசாமல் பாடசாலைக்கு தீபனையும் ஏற்றிக் கொண்டு சென்றான். பாடசாலைக்குச் சென்றவுடன் தீபன் அருணனிடம் அன்று அருணனைப் பாடசாலைக்கு ஏற்றிச் செல்லாததற்காக மன்னிப்புக் கேட்டான். அதன் பின்பு இருவரும் ஒற்றுமையான, நெருக்கமான நண்பர்கள் ஆனார்கள். எனவே நாமும் மற்றவர்களுக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உதவி செய்து வாழ்வோம்.

நாமும் பிறருக்கு உதவி செய்வோம்.

மா.கதிர்முகிலன்
அங்கத்தவர் இலக்கம் 07
வ/ நெளுக்குளம் கலைமகள்
மகாவித்தியாலயம். தரம் - 06 C


அருகில்உள்ள 3 படங்களில் ஒன்று மட்டும் வித்தியாசமாக உள்ளது. கண்டுபிடியுங்கள்..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கீழே உள்ள மிருகங்களின் வால்கள் பெட்டியின் உள்ளே இருக்கிறன.
மிருகங்களுக்குப் பொருத்தமான வால்களை அவற்றுடன் பொருத்துங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழுத்துப் பட்டி அணிவோம்.




- உடல் இறகுகளால் மூடப்பட்டிருத்தல்.
- கொம்புருப்படையிலான அலகினைக் கொண்டிருத்தல்.

முட்டையிட்டு அடைகாத்து இனம் பெருக்குதல் பறவையின் இயல்பாக கருதப்படும். மேற்கண்ட இயல்புகள் தீக்கோழியில் காணப்படுவதால் தீக்கோழி பறவையாக கருதப்படுகின்றது.

■ சிபிசிவை

## தீக்கோழி பறக்கும் இயல்பை கொண்டிராத போதிலும் பறவையினமாகக் கருதப்படுகின்றது.





தீக்கோழி முட்டை


**விடுகதை விடைகள்**

1. தவளை
2. செங்கல்
3. ஆமை
4. மண்புழு
5. கலண்டர்
6. வியர்வை
7. பென்சில்
8. தராசு
9. சூரியன்
10. நுளம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீழே உள்ள 3 படங்களில் ஒன்று மட்டும் வித்தியாசமாக உள்ளது. கண்டுபிடியுங்கள்..**






**இதயத்தினூடாக பயணித்து எதிர்ப்பக்கத்திலுள்ள நண்பனை சந்திப்பதற்கு உதவி செய்யுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான பிள்ளைகளே

உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை அனைத்தையும் அர்ச்சுனா தனது பக்கங்களில் சேர்த்து கொள்ளுவான்.

அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புதிய படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் அழகிய நிழற்படத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்

**தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்**
**அர்ச்சுனா, சிறுவர் வட்டம்**
**361 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**





# அர்ச்சுனா
## சிறுவர் வட்டம்

ARCHUNA

முழுப்பெயர் : ..............................................
..............................................

வகுப்பு : ..............................................

பிறந்த திகதி : ..............................................

பாடசாலையின் பெயர் : ..............................................
..............................................

வீட்டு முகவரி : ..............................................
..............................................

.............................. ..............................
மாணவர் கையொப்பம் அதிபர் கையொப்பம்



# அர்ச்சுனா
## சிறுவர் வட்டம்



15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் அர்ச்சுனாவில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை கவிதை கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனாவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானாகவே எழுதினார் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHUNA

# அர்ச்சுனா வின்

சிறுவர்களுக்கான மாத இதழ்

## புதிய அங்கத்தவர்





உதயராஜ் ஜதுசன்
தரம். 6
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா
அங்கத்துவ இலக்கம் . 11



மோகனாதன் திலக்ஷன்
தரம். 9C
இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்
அங்கத்துவ இலக்கம் . 09


*Happy Christmas*



மு.ஹ.மு. ஜெஸீர்
தரம். 10
உவெஸ்லி உயர்தரப் பாடசாலை கல்முனை
அங்கத்துவ இலக்கம் . 12



மோகனாதன் திவியா
தரம். 6C
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
அங்கத்துவ இலக்கம் . 10





திருச்செல்வம் கௌதம்
தரம். 2
யா/ஞானாசாரியார் கல்லூரி கரவெட்டி
அங்கத்துவ இலக்கம் . 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. துவாரகன்
தரம். 8
யாழ்/சென் ஜோசப்ஸ்
வித்தியாலயம்



த.ஆருத்திரன்
தரம். 4D
யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்

# உங்கள் கைவண்ணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





R.வர்ஷினி
தரம். 5
R/ப. தமிழ் மத்திய கல்லூரி









சி. ஹரிஹரன்
தரம். 2 C
அங்கத்தவர். இல 03
யா/இந்து ஆரம்ப பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ஆவது படத்திலிருந்து 2 ஆவது படம் ஆறு விடயத்தில் வித்தியாசமாக உள்ளது. அவற்றினை கண்டுபிடியுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GATEWAY CfICT

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK TRAINING PROGRAMME

## We inspired We GATEWAY

- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking



**CONTACT**

- Luxmee Theatre Lane, Nelliyady.
  021 226 2395
- 1st Floor, New Market Buildind,
  Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna.
  021 567 5555 / 021 222 7967

GATEWAY CfICT | GATEWAY Language Centre | GATEWAY KIDS SCHOOL of COMPUTING | IPICT International Pedagogical ICT Licence | ICDL | e-Citizen | e-TYPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அர்ச்சுனா' இதழ் உதயன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது. இல. 361 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.